
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1013

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

135

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **எஸ்.ஏ.எம்.உசேன்** அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.




# எஸ்.ஏ.எம்.உசேன்
# சுயமரியாதைக் கொள்கைச் சுடரொளி!

“ஆயிரம் விளக்கில் ஓர் அற்புதமான விளக்கு உசேன். இன்னும் சொல்ல வேண்டுமேயானால், ‘அலாவுதீனும் அற்புத விளக்கும்’ என்போமே, அதைப்போல அலாவுதீன் கையிலே கிடைத்த அற்புத விளக்கைப் போல தி.மு.கழகத்தின் கையிலே கிடைத்த அற்புத விளக்கு ஆயிரம்விளக்கு உசேன்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்ற உடன்பிறப்பு ஆயிரம்விளக்கு எஸ்.ஏ.எம்.உசேன்.

குடும்பத்தைப் பற்றியோ, தான் பெற்ற பிள்ளைகளின் கல்வி பற்றியோ கவலைப்படாமல் கழகப் பணிகளில் முழுநேரம் ஈடுபட்டு வந்தவர் உசேன். கிளைக் கழகச் செயலாளர், வட்டச் செயலாளர், ஆயிரம்விளக்கு பகுதிச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர், கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், தலைமை நிலையச் செயலாளர் என கழகத்தின் பல பொறுப்புகளில் பணியாற்றியவர். 2001-2006 காலகட்டத்தில் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகப் பணியாற்றியவர்.

ஆயிரம் விளக்கு உசேன் அவர்களின் பூர்வீகம் காஞ்சிபுரம் ஒலிமுகமதுபேட்டை என்றாலும், பிறந்தது, படித்தது எல்லாம் சென்னை நகரில்தான். 1939- ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ஆம் தேதி பிறந்தவர். ராயப்பேட்டையில் உள்ள, சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் படித்தவர். பெற்றோர் அப்துல் காதர் - நாகூர் மீரா. தனது 15-வது வயதிலேயே கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

### கருப்புக் கொடியும் தடியடியும்

எஸ்.ஏ.எம்.உசேன், ஆயிரம்விளக்கு பகுதிச் செயலாளராக பொறுப்பில் இருந்த நேரத்தில் சென்னை வந்த இந்திராகாந்திக்கு கருப்புக் கொடி காட்ட வேண்டுமென கழகம் அறிவித்திருந்தது. அன்றைய மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சீத்தாபதி, நீலநாராயணன், ஆற்காடு நா.வீராசாமி இவர்களது தலைமையில் சைதாப்பேட்டையில் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவரையும் காவல்துறையினர் தடியடி நடத்தி போராட்டத்தைக் கலைத்தனர். தடியடிக்கு ஆளாகி பாதிக்கப்பட்ட தன் தம்பிமார்களைப் பார்த்திட, காவல்நிலையம் வந்த தலைவர் கலைஞர், அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு உசேனை பார்த்து, “போராட்டத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை, காவலர்களின் அத்துமீறிய நடவடிக்கைகளை கவனித்து வந்து செய்திகளைத் தா என்றுதான் உன்னை அனுப்பினேன். நீ ஏன் போராட்டத்தில் கலந்து கொண்டாய்” என்று கேட்டார். அப்போது அருகில் இருந்த ஆர்.டி.சீத்தாபதி “முதலில் உசேன் முதுகைப் பாருங்கள்”என்றார். காவலர்கள் நடத்திய பிரம்படியால் உசேனின் முதுகில் கைத்தடி அளவுக்கு வீக்கம் இருந்தது. தலைவர் கலைஞர் உசேனின் முதுகைத் தடவிக் கொடுத்து கண்கலங்கினார். இந்நிகழ்ச்சி குறித்து உசேன் கூறுகையில், “தலைவர் தடவிக் கொடுத்த அன்றிலிருந்து இன்றுவரை என் முதுகெலும்பு எதற்கும் அஞ்சாது சுயமரியாதையோடு நிமிர்ந்து நிற்கிறது” என்கிறார்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி, இந்தியாவிலேயே இருமுறை கைது செய்யப்பட்ட உடன்பிறப்பு ஆயிரம் விளக்கு உசேன் ஒருவர்தான் என தலைமைக் கழகத்தின் குறிப்பு பெருமையுடன் குறிப்பிடுகிறது. தவிர, கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் முதல் தொண்டராகக் கலந்துகொண்டு சிறை சென்றவர் உசேன்.

### உள்ளத்தில் கலைஞர்

கழகத்திற்காக உழைத்திடும் தொண்டர்களையும் முன்னோடிகளையும் தன் இதயத்தில் பதித்து மதித்துப் போற்றிடும் தலைவர் கலைஞர், உசேன் அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த போது, பார்ப்பதற்காக அவர் இல்லம் சென்றார். அப்போது ஒரு சிறிய கூரைவேய்ந்த குடிசை வீட்டில் உசேன் குடியிருந்தார். தலைவர் கலைஞர் அந்த வீட்டில் நிமிர்ந்த நிலையில் செல்ல இயலாமல், குனிந்து சென்று தரையில் அமர்ந்து பார்த்துவிட்டு திரும்பினார். அந்த அளவுக்கு உசேன் அவர்கள் மீது பற்று கொண்டிருந்தார் கலைஞர். அதைவிடவும் ஆயிரம் மடங்கு பற்றினை தலைவரிடத்திலும், தலைவரின் குடும்பத்தின் மீதும் உயிரினும் மேலான உணர்வினைக் கொண்டிருந்தார் உசேன். குறிப்பாக, இன்றைய கழகத் தலைவர் அவர்கள் மீது அளவற்ற அன்பு கொண்டவர்.

கழக வளர்ச்சிக்காக வட்டங்கள்தோறும் நடந்தே சென்று கழகப் பணியாற்றிய உசேன் அவர்களுக்கு முதன்முதலில் இருசக்கர வாகனம் அளித்தவர், இன்றைய கழகத் தலைவர்தான். கால்நடையாகவும், சைக்கிளிலும் சென்று பணியாற்றி வந்த உசேன் அவர்களுக்கு 1983-ஆம் ஆண்டு செப்டம்பர் 18-ஆம் தேதி ஆயிரம்விளக்கு கிரீம்ஸ் சாலைப் பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், இன்றைய கழகத் தலைவர், இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, ஸ்கூட்டர் வழங்க ஏற்பாடுகள் செய்து, தலைவர் கலைஞர் கரங்களால் வழங்க வைத்தார்.

### உழைப்புக்கு மதிப்பு

உசேன் அவர்கள் தலைமை நிலையச் செயலாளராக இருந்தபோது, ஒரு நாளில் 18 நேரம் அண்ணா அறிவாலயத்திலேயே இருப்பார். தலைவர் கலைஞர் காலை நடைப்பயிற்சிக்காக 6 மணிக்கு அண்ணா அறிவாலயம் வருகிறார் என்றாலும், அவருக்கு முன்னர் உசேன் இருப்பார். ஒருநாள் வரவில்லை என்றாலும், “உசேன் எங்கே?” எனக் கேட்காமல் கலைஞர் இருந்ததில்லை. கழகத்துக்கும் தலைமைக்கும் ஓயாது உழைத்த உசேனுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில், 2013 -ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற தலைமைக் கழகத்தின் முப்பெரும் விழாவில், கலைஞர் விருதினை வழங்கி சிறப்பு செய்தார் தலைவர் கலைஞர்.

2019-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 06- ஆம் தேதி, உசேன் அவர்கள் உடல்நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, இன்றைய கழகத் தலைவர் அவர்கள், உறங்காமல் அவரது உடல்நலனை விசாரித்து அறிந்து கொண்டே இருந்தார். வேறு மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடியுமா என்று கேட்டுக்கொண்டே இருந்தார். எப்படியாவது அவரைக் காப்பாற்றிட வேண்டும் என்ற துடிதுடிப்பும் பதைபதைப்பும் அவரிடம் தெரிந்தது என தனது நினைவுக் குறிப்பினை பகிர்ந்துள்ளார் இன்றைய தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன் அவர்கள்.

உசேன் அவர்களின் இறுதி அஞ்சலியில் தலைவர் அவர்கள் நடந்து வந்து மரியாதை செய்தார்.

“கொள்கை மாறாத உறுதி, எதற்கும் அஞ்சாத துணிவு, களத்தில் சளைக்காத ஆற்றலே அண்ணன் உசேன். அவரது மறைவு கழகத்திற்கும், தனிப்பட்ட முறையில் எனக்கும் பேரிழப்பு” என அன்று உசேன் அவர்களின் உழைப்பைப் போற்றினார்.

உசேனுக்கு கலைஞர் விருது அளித்து பேசியபோது, “கழக வளர்ச்சிக்கு உழைக்கும் தொண்டனை உச்சியில் ஏற்றி, அவன் தலைமுறையும் நினைந்து குளிர்ந்து மகிழ்ந்திடும் வண்ணம் வழங்கப்படுவதுதான் தி.மு.கழகம் வழங்கிடும் விருதுகள்” என்றார். அந்த வகையில் ஆயிரம்விளக்கு எஸ்.ஏ.எம் உசேன் ஆண்டாண்டு காலம் நினைவுகூரப்படுவார். ஆயிரமாயிரம் கொள்கைச் சுடர்களில் உசேனின் புகழொளி என்றும் வீசும்.

**...துடிக்கும்**

> **“கொள்கை மாறாத உறுதி, எதற்கும் அஞ்சாத துணிவு, களத்தில் சளைக்காத ஆற்றலே அண்ணன் உசேன்.”**

## மதவாதத்தை வீழ்த்திய மாணவர்கள்!



டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டு மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியது, பெரியார் பிறந்தநாள் விழாவைக் கொண்டாட எதிர்ப்பு தெரிவித்தது, அசைவ உணவுகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது என வலதுசாரி அமைப்பான ஏ.பி.வி.பி. கடந்த சில ஆண்டுகளாக ஜனநாயக விரோத செயல்களைத் துணிச்சலாகச் செய்து வந்தது. இதற்கு பதிலடியாக கடந்த ஆண்டு நடைபெற்ற மாணவர் தேர்தலில், மத்திய குழுவில் உள்ள நான்கு பதவிகளில் மூன்றைப் பறிகொடுத்தது. இடதுசாரி கூட்டணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், இந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 4 இடங்களையும் இடதுசாரி கூட்டணியே முழுமையாகக் கைப்பற்றியுள்ளது. 5.11.2025 அன்று தேர்தல் நடைபெற்ற நிலையில், 6.11.2025 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இடதுசாரி கூட்டணியிலிருந்து பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் மத்திய குழுத் தலைவராக அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பின் (ஏ.ஐ.எஸ்.ஏ.) வேட்பாளர் அதிதி மிஸ்ரா தேர்வு செய்யப்பட்டுள்ளார். பொதுச்செயலாளராக ஜனநாயக மாணவர்கள் கூட்டமைப்பின் (டி.எஸ்.எஃப்.) சுனில் யாதவ், இணைச் செயலாளராக ஏ.ஐ.எஸ்.ஏ. வேட்பாளர் டேனிஷ் அலி, துணைத் தலைவராக எஸ்.எஃப்.ஐ. வேட்பாளர் கோபிகா பாபு ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு, இடதுசாரி மாணவர் அமைப்புகள் மூன்று இடங்களை வென்றிருந்த நிலையில் இந்த ஆண்டு 4 இடங்களையும் முழுமையாக வென்றுள்ளன. இவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட வலதுசாரி அமைப்பான ஏ.பி.வி.பி. படுதோல்வியைச் சந்தித்துள்ளது. மதவாதத்தை வீழ்த்திய மாணவர்களுக்கு சமூக வலைதளங்களில் வாழ்த்துகள் குவிந்துள்ளன.

## ஃப்ளாஷ்பேக்





ஏ.வீ.இராமநாதன்

### கொடுங்கோல் ஆட்சியைக் கண்டித்து பொதுக்கூட்டம்!

1993-ஆம் ஆண்டு, அம்மையார் ஜெயலலிதாவின் கொடுங்கோல் ஆட்சியைக் கண்டித்து, தேனாம்பேட்டை காவல் நிலையம் எதிரில் உள்ள வி.வி.கோவில் தெருவில், இனமானப் பேராசிரியர் தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின்போது பேராசிரியர் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செய்தேன். உடன் அன்றைய 113-வது வட்டச் செயலாளர் இரா.அகவழகன், கழகத் தோழர் ராஜமாணிக்கம் ஆகியோர் உள்ளனர்.

**– ஏ.வீ.இராமநாதன்,**
**மாவட்டப் பிரதிநிதி, சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நாடாளுமன்றத்துக்கு 25 இடங்கள்!

1967-ஆம் ஆண்டு, சட்டமன்றத் தேர்தலுடன் நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெற்றது. 25 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றது. பேரறிஞர் அண்ணா, தென் சென்னைத் தொகுதியில் வெற்றிபெற்றார். தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்த சுதந்திரா கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகள் வெற்றிபெற்றன.

**திருத்தம்** : நவம்பர் 07 வெளியான கருவூலம், 1957-ஆம் ஆண்டு என தொடங்கியுள்ளதை, 1967 என திருத்தி வாசிக்க வேண்டுகிறோம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131